## FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109754

1. District மாவட்டம் : திருச்சி மாவட்டம் PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு Year ஆண்டு : 2022 FIR No. மு.த.அ. எண் : 7 Date நாள் : 24/5/2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 21/5/2022 Date to நாள் வரை :
   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 13.00hrs Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24/5/2022 Time நேரம் : 09.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்துமூலமாக (கணினி)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 57 km South west.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் முகமது இஸ்மாயில் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முகமது உசேன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12.4.62 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி எண்: 2353, கிழக்கு தெரு, புத்தாநத்தம், மணப்பாறை வட்டம், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. வெங்கட்ரமணன், பஞ்சாயத்து கிளார்க், புத்தாநத்தம் ஊராட்சி, மணப்பாறை பஞ்சாயத்து யூனியன் அலுவலகம், திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வெளியூர் சென்றதால் தகவல் கொடுப்பதில் தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/5/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
24/05/22

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 24/5/2022.

Name: பெயர் ............ 
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்.

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

முதல் தகவல் அறிக்கை எண் 07/2022, காலம்–12ன் தொடர்ச்சி

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (24.05.2022) காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், புத்தாநத்தம் ஊராட்சி, எண்.2353, கிழக்குத்தெருவில் வசித்து வரும் முகமது உசேன் மகன் திரு.முகமது இஸ்மாயில் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், புத்தாநத்தம் ஊராட்சி, ஊராட்சி கிளார்க் மற்றும் புகார்தாரர் திரு.இஸ்மாயில் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்று 24.05.2022 காலை 09.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, குற்ற எண்.07/2022 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்ட புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் எம்.முகமது இஸ்மாயில் வயது 60/22, த/பெ.முகமது உசேன், எண்.2353, கிழக்குத்தெரு, புத்தாநத்தம் ஊராட்சி, மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சிராப்பள்ளி. அய்யா, நான் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன், மேற்சொன்ன விலாசத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 2006ஆண்டு முதல் 2011ஆண்டு வரை புத்தாநத்தம் பஞ்சாயத்தில் கவுன்சிலராக பதவி வகித்து வந்தேன். மேலும் பிரிட்டனியா பிஸ்கட் மற்றும் டால்மியா சிமெண்ட் கம்பெனியின் ஏஜெண்ட்டாக துவரங்குறிச்சி, கோவில்பட்டி, வளநாடு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு வினியோகம் செய்யும் தொழிலை கடந்த 20 வருடங்களாக செய்து வருகிறேன். எனது மனைவி அஸ்மா பேகம் பெயரில் புத்தாநத்தம் ஊராட்சி தொடர்பான அரசு பணிகளை 10 வருடங்களாக டெண்டர் முறையில் எடுத்து வேலை செய்துவருகிறேன். திருச்சி மாவட்டம் மணப்பாறை ஊராட்சி ஒன்றிய புத்தாநத்தம் ஊராட்சிக்கு உட்பட்ட கிழக்கு தெருவில் 15வது நிதிகுழு மான்யம் 2020–2021 படி

ரூ.4,00,000/- மதிப்பீட்டில் புதிய போர்வெல், மின் மோட்டார் மற்றும் பைப் லைன் ஆகியவை அமைப்பது தொடர்பாக கடந்த 8.2.21 அன்று மேற்சொன்ன பணி செய்ய வேலையுத்திரவு எனது மனைவி பெயரில் கிடைக்க பெற்று 2022-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பணியினை தொடங்கி ஏப்ரல் 2022-ல் பணி முடித்தேன். இப்பணிக்காக எனது மனைவி பெயரிலுள்ள வங்கிக்கணக்கில் அதே மாதத்தில் ரூ.3,66,411/- வரப்பெற்றது. மீதமுள்ள தொகை பணி முடித்தும் கிடைக்க பெறாததால் புத்தாநத்தம் ஊராட்சி கிளார்க் வெங்கட்ரமணனை கடந்த 21.5.22 அன்று மதியம் சுமார் 1 மணியளவில் ஊராட்சி அலுவலகத்தில் சந்தித்து எனக்கு வரவேண்டிய மீத தொகை பற்றி கேட்டபோது, அவர் பொதுவாக டெண்டர் பணி செய்பவர்கள் ஒவ்வொரு பணிக்கும் டெண்டர் தொகையில் 2% தொகை எனக்கு தனியாக தந்துவிடுவார்கள். உங்க வொர்க் மொத்தம் 4 லட்ச ரூபா, உங்களுக்கு மீத தொகை வழங்க நான் தான் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் அதனால் நீங்கள் எனக்கு தனியாக தொகை தாவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு ரூ.8,000/- கொடுத்து விடுங்கள் உங்களுக்கு உங்க மீதி பணம் அடுத்த வாரமே கிடைக்க ஏற்பாடு செய்து விடுகிறேன் என்று கூறினார். அதற்கு, நானே எனது மனைவியின் பெயரில் சின்ன சின்ன ஒர்க் எடுத்து செய்து வருகிறேன். இன்னும் நிறைய வேலைக்கு உங்களிடம் வர வேண்டியிருக்கும், கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் சரி ரெண்டாயிரம் கொறச்சிகிட்டு ஆறாயிரம் ரூவா திங்கள் செவ்வாய்ல என்னிடம் கொடுத்து விடுங்கள் இல்லையென்றால் உங்களுக்கான மீதி தொகை கிடைக்க ஏற்பாடு செய்ய மாட்டேன் என்று கூறினார். நான் வேறு வழி தெரியாமல் அப்போதைக்கு அவரிடம் சரி என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மனதில் நினைத்துக்கொண்டு அங்கிருந்து எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது மனைவி அஸ்மா பேகத்திடம் பஞ்சாயத்து கிளார்க் வெங்கட்ரமணன் லஞ்சம் கேட்ட விபரத்தை சொன்னேன். அதற்கு எனது மனைவி லஞ்சம் எல்லாம் கொடுக்க வேண்டாம். லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் போய் கம்பௌண்ட் கொடுங்கள் என்று சொன்னார். என்னுடைய தொழில் வேலையாக நான் வெளியூர் சென்றுவிட்டதால் இன்றுதான்

வரமுடிந்தது. என்னிடம் லஞ்சம் கேட்ட புத்தாநத்தம் ஊராட்சி கிளார்க் வெங்கட்ரமணன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (முகமது இஸ்மாயில்) 24/05/22. Sir, Submitted to the Court of the Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Trichy. Received the report today on 24.05.2022 at 08.00 hrs. Made preliminary enquiry and registered a case in Trichy V&AC Cr.No.07/2022, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 09.00 hrs on 24.05.2022. Sd.xxx (A.PRASANNA VENKATESH) 24/05/2022 Insp. of Police, V&AC, Trichy.

24/5/2022
[A.PRASANNA VENKATESH]
Insp. V&AC, Trichy.